ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2118/46 - 2019 අප්‍රේල් මස 09 වැනි අඟහරුවාදා - 2019.04.09

*2118/46 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

#### தென் மாகாண மாகாண சபை

*தென் மாகாண மாகாண சபையின் 2019 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நீர்ப்பாசன பிரமாணம்*

*தென் மாகாண மாகாண சபை மூலம் 2019 ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதி அனுமதிக்கப்பட்ட தென் மாகாண கௌரவ ஆளுநர் அவர்கள், 2019 ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி அனுமதிக்கப்பட்ட தென் மாகாணத்தின் 2019 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, நீர்ப்பாசன பிரமாணம் ஆளுநரின் அனுமதியைப் பெற்ற 2019, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறையாகும் என தென் மாகாண சபையின் விவசாய, கமத்தொழில் அபிவிருத்தி, நீர்ப்பாசன, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, உணவு வழங்கல் மற்றும் விநியோக, வியாபார மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான அமைச்சர் உடலமத்த கமகே தயாவங்ச ஆரியதிலக ஆகிய நான், இதன் மூலம் அறியத்தருகின்றேன்.*

உடலமத்த கமகே தயாவங்ச ஆரியதிலக,<br>
தென் மாகாண சபை விவசாய, கமத்தொழில் அபிவிருத்தி,<br>
நீர்ப்பாசன, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு,<br>
உணவு வழங்கல் மற்றும் விநியோக, வியாபார மற்றும்<br>
கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான அமைச்சர்.

தென் மாகாண மாகாண சபை,<br>
விவசாய அமைச்சு காரியாலயம்,<br>
4 ஆம் மாடி, தக்சிணபாய,<br>
லபுதுவ, காலி,<br>
2019, ஏப்பிறல் 01.

1A - PG 4479 — 10 (2019/04)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2019 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நீர்ப்பாசன சாசனம்**

அறிமுகவுரை.

இலங்கை அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் 09 ஆம் உப பிரிவின் 01 ஆவது பட்டியலின் 19 ஆவது அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்காக தென் மாகாணத்தின் மாகாணங்களுக்கிடைப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்கள் அல்லது மாகாணங்களுக்கிடைப்பட்ட நீர்ப்பாசன மற்றும் காணி அபிவிருத்தித் திட்டங்கள் தவிர அனைத்து நீர்ப்பாசன நடவடிக்கைகள் மற்றும் இணைப்புப் பொறிமுறை, அவற்றைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் பராமரிப்பதற்காக அது தொடர்பான நடவடிக்கைகளை இலகுவாக்குவதற்காக தென் மாகாண நீர்ப்பாசன நிதியம் என்ற பெயருடைய நிதியம் ஒன்றை உருவாக்குவதற்காகவும் அதன் விளைவாக ஏற்படும் விடயங்கள் தொடர்பான விதிகளைத் திட்டமிடுவது தொடர்பான சாசனம் ஆகும்.

இந்தச் சாசனத்தினூடாக 1951 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நீர்ப்பாசன (திருத்த) சட்டம், 1968 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க நீர்ப்பாசன (திருத்த) சட்டம், 1973 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க நீர்ப்பாசன (திருத்த) சட்டம், 1983 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க நீர்ப்பாசன (திருத்த) சட்டம், 1990 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க நீர்ப்பாசன (திருத்த) சட்டம், 1994 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நீர்ப்பாசன (திருத்த) சட்டம் ஆகிய சட்டங்களின் திருத்தம் 1948 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க நீர்ப்பாசனக் கட்டளையில் இணைக்கப்பட்டுள்ளது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தென் மாகாண மாகாண சபையினால் இவ்வாறு சட்டமாக்கப்பட்டுள்ளது.

சுருக்கப் பெயர்.

1. இந்த சாசனம் 2019 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தென் மாகாண நீர்ப்பாசன சாசனம் என அழைக்கப்படும்.

நடைமுறைப்படுத்தப் படும் திகதி.

2. தென் மாகாண ஆளுநரினால் அனுமதியளிக்கப்பட்ட திகதியிலிருந்து இந்த சாசனம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

## I ஆவது அத்தியாயம்

திணைக்களத்தை நிறுவுதல்.

3. இந்த சாசனத்தின் விதிகளை செயல்படுத்துவதற்காக (இங்கு இதன் பின் திணைக்களமாக குறிப்பிடப்பட்டுள்ள) தென் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

திணைக்களத் தலைவரை நியமித்தல்.

(1) இந்த சாசனத்தின் கீழ் திணைக்களத்தின் மீது சுமத்தப்படும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்காக (இங்கு இதன் பின் அத்தியட்சகர் என்ற பெயரில் குறிப்பிடப்பட்டுள்ள) தென் மாகாண நீர்ப்பாசன அத்தியட்சகர் என்ற பெயரின் கீழ் அத்தியட்சகர் ஒருவர் நியமிக்கப்படுவதோடு அவர் திணைக்களத்தின் தலைவருமாவார்.

திணைக்கள கட்டமைப்பு.

(2) இந்த திணைக்களத்தின் கடமைகளை வினைத்திறனாக முன்னெடுக்கவும் திணைக்களத்தின் முகாமையை இலகுபடுத்தவும் இத்திணைக்களத்தில் மேலதிக மாகாண அத்தியட்சகர் ஒருவர், பிரதான நீர்ப்பாசன பொறியியலாளர், மூன்று மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர்கள், மூன்று நீர்ப்பாசன பொறியியலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கியதாக அமையும்.

(3) மாகாண நீர்ப்பாசன அத்தியட்சகர், மேலதிக மாகாண அத்தியட்சகர் பதவிகளை நியமிப்பது தொடர்பாக 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க மாகாண சபைகள் (திருத்தம்) சட்டத்தின் திருத்தமாக 1987 ஆம் ஆண்டின் மாகாண சபை சட்டத்தின் 32 ஆம் பிரிவின் விதிகளுக்கு அமைவானது.

செயலாளரின் அதிகாரத்திற்கு உட்பட்ட வகையில் அத்தியட்சகருக்கு உரிய அதிகாரங்கள்.

4. அத்தியட்சகர், மாகாண நீர்ப்பாசனத்திற்குப் பொறுப்பான செயலாளரின் சாதாரண நிர்வாகம் மற்றும் விதிமுறைகளுக்கேற்ப செயற்படுபவராவார்.

## II ஆவது அத்தியாயம்

5. அத்தியட்சகர் பின்வரும் அதிகாரங்களைக் கொண்டிருப்பார் : *அத்தியட்சகரின் அதிகாரங்கள்.*

(1) மாகாணத்தினுள் தற்போதுள்ள நீர்ப்பாசன முறைமைகளை மேலும் திறமையாக திட்டமிடல் மற்றும் செயல்படுத்தல்.

(2) மாகாணத்தினுள் புதிய நீர்ப்பாசன முறைமைகளை மேலும் திறமையாக திட்டமிடல் மற்றும் செயல்படுத்தல்.

(3) நீர்ப்பாசன புனரமைப்பு, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்காக விவசாய சமூகத்தின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல்.

(4) நீர்ப்பாசன முறைமைகள், நீர்ப்பாசன உடமைகளுக்கு சேதம் ஏற்படுத்தும் நபர்களை சட்டத்தின் முன் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல், அது தொடர்பாக முறைப்பாடு செய்தல் மற்றும் வழக்குகள் தொடர்தல்.

(5) நீர்ப்பாசன பாதுகாப்பு பிரதேச வரைபடத்தை வரைதலும் அதனைப் பிரகடனப்படுத்தலும்.

(6) நீர்ப்பாசன திட்ட சேதங்கள் மற்றும் அழிவை ஏற்படுத்தும் சூழற் காரணிகளை தடுத்தல், குறைத்தல் மற்றும் அதற்காக சுற்றுப்புற சூழற் காரணிகளை அபிவிருத்தி செய்தல்.

(7) வெள்ளத்தினால் ஏற்படும் சேதங்களை குறைப்பதற்கான அமைப்புகளை உருவாக்குதலும் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும்.

(8) வயல் நிலங்களை கரைப்படுத்துவதனால் ஏற்படும் சேதங்களைக் குறைப்பதற்காக உரிய நடவடிக்கைகளை எடுத்தல்.

(9) நீர்ப்பாசன அமைப்புகளின் அபிவிருத்திக் குழுவினை மேற்பார்வை செய்வதற்காக அதிகாரிகளை நியமித்தல்.

(10) இந்த சாசனத்தின் பணிகளைப் பூர்த்திசெய்வதற்காக பூரண அறிவித்தலின் பின் ஏதாவது சோதனை செய்வதற்காக, அபிவிருத்தி செய்வதற்காக, பரிபாலிப்பதற்காக ஏதாவது சொத்துக்களுக்கு உள்ளடக்குதல்.

6. அத்தியட்சகருக்கு உள்ள அதிகாரங்களை அத்தியட்சகரினால் எழுத்து மூலமாக மேலதிக மாகாண நீர்ப்பாசன அத்தியட்சகருக்கு, பிரதான நீர்ப்பாசன பொறியியலாளருக்கு மாற்றிக் கொடுக்க முடியும். *அத்தியட்சகரின் அதிகாரங்களை வழங்குதல்.*

7. அத்தியட்சகரின் பணிகள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும் : *அத்தியட்சகரின் பணிகள்.*

(1) தென் மாகாண நீர்ப்பாசன அத்தியட்சகரினால் கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் திணைக்களத்தின் விடய நோக்கத்திற்கு உரித்தான அனைத்து வகையான நீர்ப்பாசனங்களை அடையாளம் காணல், ஆவணப்படுத்தல், வரைபுபடுத்தல் மற்றும் பிரகடனப்படுத்தல்.

அப்படியாயினும், பிரகடனப்படுத்தப்பட்ட அறிவிப்பிற்கு உள்ளடங்கிய நீர்ப்பாசனங்கள் மாற்றப்படுவதற்கு அல்லது புதிதாக உள்ளடக்குவதற்கு நேருமாயின் அதனை மாற்றுவதற்கு அல்லது உள்ளடக்குவதற்கு அமைச்சரின் அங்கீகாரத்துடனேயே அத்தியட்சகரினால் பிரகடனப்படுத்த வேண்டும்.

(2) மாகாண நீர்ப்பாசன கட்டமைப்பு, புதிய கட்டுமாணங்கள், புனரமைப்புகள், அபிவிருத்தி செய்தல் மற்றும் பாதுகாப்பதற்காக ஆண்டுதோறும், குறுங்கால, இடைக்கால மற்றும் நெடுங்கால திட்டங்களை வகுத்தல்.

(3) ஒழுங்குபடுத்தப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஒதுக்கல்களை பெற்றுக்கொள்வதற்கு முன் மாகாண திட்டமிடல் குழுவிற்கு அல்லது பிரதான செயலாளருக்கு முன்வைத்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளல்.

(4) மாகாண நீர்ப்பாசனத் திட்டத்திற்காக நீர்ப்பாசனப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் குழு என்ற பெயரில் குழுவொன்றை நில மட்டத்திற்கேற்ப அமைத்து நடாத்திச் செல்லலும் பதிதலும்.

(5) நீர்ப்பாசன பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நீர்ப்பாசன கட்டமைப்பு பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் பெயரில் நீர்ப்பாசன கட்டமைப்பிற்கு பொருந்தும் வகையில் குழுவை அமைத்து நடாத்திச் செல்லல் மற்றும் பதிவுசெய்தல்.

## III **ஆவது அத்தியாயம்**

*நில மட்டத்தில் குழு அமைத்தல், அங்கத்தவர், பங்கு, அமைப்பு மற்றும் பணிகள்*

8. தென் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அத்தியட்சகரினால் அனைத்து மாகாண நீர்ப்பாசனத் திட்டமிடல்களுக்காகவும் நீர்ப்பாசன பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் பெயரில் குழுவொன்றை நில மட்டத்திற்கேற்ப அமைத்தல் வேண்டும்.

*தகைமைகள்.*

(1) நீர்ப்பாசன பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் அங்கத்தவராவதற்கு கீழ்க்காணும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும் :

(அ) விவசாயத்தை பிரதான வாழ்வாதாரமாகக் கொண்ட நபராக வேண்டும்.

(ஆ) பதினெட்டு வயதிற்கு குறையாதவராக இருக்க வேண்டும்.

(இ) தான் அங்கத்தவராக எதிர்பார்க்கும் நீர்ப்பாசன பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் நிரந்தர வதிவுடையவராக அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தில் அப்பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல்.

*நெருங்கிய அங்கத்தவருக்கான தகைமைகள்.*

(2) நீர்ப்பாசன பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவிற்கு நெருங்கிய அங்கத்தவராவதற்கு கீழ்க்காணும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும் :

(அ) தமது பிரதான வாழ்வாதாரம் விவசாயம் இல்லையாயினும், குழுவின் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் விவசாய நிலத்தின் உரிமையாளராக அல்லது குடியிருப்பாளராக அல்லது உரிமையாளராக இருத்தல்.

(ஆ) விவசாயம் தொடர்பான உற்பத்தியொன்றின் அல்லது விவசாய உற்பத்தி மற்றும் பொருள் விற்பனையில் ஈடுபடுபவராதல்.

(3) தென் மாகாண விவசாய அத்தியட்சகரின் அனுமதியின் கீழ் மற்றும் இந்தக் குழு அங்கத்தவரின் ஒப்புதலுடன் நீர்ப்பாசன பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் ஆலோசகராக குறித்த பிரதேசத்திற்குப் பொறுப்பான விவசாய ஆலோசகரை நியமிக்கலாம்.

(4) இவ்வாறு உருவாக்கிய குழுவின் கூட்டங்களை நடாத்துவதற்கு அனைத்து அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்றின் பங்களிப்பு இருக்க வேண்டும்.

(5) அனைத்து நீர்ப்பாசனப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் அத்தியட்சகரினால் அனுமதியளிக்கக்கூடிய அமைப்பிற்கு ஏற்ப செயற்பட வேண்டும்.

9. நீர்ப்பாசன பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் பணிகள் பின்வருவனவாகும் :- நீர்ப்பாசன பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் பணிகள்.

(1) அனைத்து நீர்ப்பாசன பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவினாலும் சுய அதிகாரத்திற்குள் உள்ள குளம், அணைகள் மற்றும் வாய்க்கால்கள் அருகில் மேற்கொள்ள வேண்டிய பராமரிப்பு நடவடிக்கைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் மற்றும் திணைக்களத்தின் மேற்பார்வையின்கீழ் மேற்கொள்ளல் ;

(2) நீர்ப்பாசன முகாமைத்துவ நடவடிக்கைகள் உரிய காலத்தில் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்து கொள்ளல் ;

(3) நீர்ப்பாசன தொழில் மூலம் வழங்கப்படும் நீர் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படும் நீர், வினைத்திறனான முறையில் முகாமை செய்வதற்கு அவசியமான ஒத்துழைப்பை உரிய நிறுவனத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் ;

(4) விவசாய காணிகளின் அல்லது வயற் காணிகள் அல்லது நெல் பயிரிடல் இல்லாவிடில் வேறு முறையில் பயிர்ச் செய்கைக்காக ஊக்கமூட்டும் விதமாக விவசாய சங்கங்களின் தேவைகளைப் பெற்றுக்கொடுத்தல் ;

(5) நெல் பயிரிடல் அல்லது வேறு வகையில் பயிரிடலுக்கான சம்பிரதாயங்களை நடாத்துவதற்காக விவசாய சங்கங்களுக்குத் தேவையான உதவிகளைப் பெற்றுக்கொடுத்தலும் ஊக்கப் படுத்தலும் ;

(6) மண்ணைப் பாதுகாப்பதற்காகப் பூச்சிக்கொல்லிகளினதும் நோய்களிலிருந்தும் பாதுகாப்புப் பெற நடவடிக்கை எடுத்தல்.

10. (1) நீர்ப்பாசன பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் அங்கத்தவர்களின் அதிக விருப்பைப் பெற்று "நிலமட்ட முகவர்" என்ற பெயரில் ஒருவரைத் தெரிவுசெய்வதோடு அவர் நீர்ப்பாசனப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவில் பதவி வகிப்பவராகவோ அங்கத்தவராகவோ இருக்கலாம். நில மட்ட முகவரின் நியமிப்பும் பதவிக் காலமும்.

(2) நியமிக்கப்படும் நில மட்ட முகவர் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 03 வருட காலத்திற்கு நீக்கப்பட மாட்டார்.

11. மேலே 10 ஆவது பிரிவின் கீழ் இடம்பெறும் நில மட்ட முகவரின் பதவிக்காலம் கீழே குறிப்பிட்டுள்ள சந்தர்ப்பத்தில் காலியாகும். நில மட்ட முகவரை நீக்குதல் அல்லது இராஜினாமாச் செய்தல்.

(1) நில மட்ட முகவர் மரணித்தல்.

(2) அத்தியட்சகருக்கு அனுப்பப்படும் இராஜினாமாக் கடிதம் மற்றும் அது ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அத்தியட்சகர் வழங்கும் அறிவித்தல்.

(3) திறமையின்மை அல்லது கவனயீனம் காரணமாக அத்தியட்சகரினால் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையில் வெளியாகிய விடயங்களை கருத்திற்கொண்டு பதவி நீக்கம்.

(4) நீர்ப்பாசன பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் அனைத்து அங்கத்தவர்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்கில் தீர்மானம் எடுத்தல்.

12. (1) மேலே 11 ஆவது பிரிவின் (2) மற்றும் (3) ஆம் உப பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் பதவி நீக்கம் தொடர்பான மேன்முறையீடொன்றை நீக்கப்படும் நாளில் இருந்து 30 நாட்களுக்குள் செயலாளருக்கு அவ்வாறாக பதவி நீக்கத்திற்கு உள்ளானவர்களினால் எழுத்து மூலம் முன்வைக்க முடியும். அத்துடன் அவ்வாறு முன்வைக்கப்படும் மேன்முறையீடு தொடர்பாக செயலாளரின் முடிவே இறுதி முடிவாக வேண்டும். பதவி நீக்குதல் தொடர்பான மேன்முறையீடு.

(2) இங்கு (1) ஆவது உப பிரிவின் கீழ் மேன்முறையீடொன்றை முன்வைத்து அது தொடர்பான முடிவு செயலாளரினால் அறிவிக்கப்படும் வரை அல்லது பதவி நீக்கப்பட்டு 30 நாட்கள் கடக்கும்முன் நீர்ப்பாசன பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவொன்றினால் நில மட்ட முகவர் ஒருவரை நியமிக்காது இருக்க வேண்டும்.

*நில மட்ட முகவரின் பணிகள்.*

13. நில மட்ட முகவரின் பணிகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும் :

(1) தமது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் நீர்ப்பாசன கட்டமைப்பைப் பாதுகாத்தல், நீர்ப்பாசன கட்டமைப்புக்கு சேதம் விளைவிப்பவர்களை சட்டத்தின் முன் கொண்டு செல்வதற்குத் தேவையான ஒத்துழைப்பை திணைக்களத்திற்கு வழங்குதல், நீர்ப்பாசன நீர்த்தேக்கங்கள் மற்றும் ஏனைய நீர்ப்பாசனங்கள் மூலம் வெளியிடப்பட்ட நீரை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், உடனடியாக திட்டமிடப்பட்ட கால அட்டவணைக்கேற்ப உடனடியாக திட்டங்களை மேற்கொள்ளல் மற்றும் நடைமுறைப்படுத்த ஒத்துழைத்தல்.

(2) தேவையான அனைத்துச் சந்தர்ப்பத்திலும் விவசாய சேவைத் திணைக்களத்தினால் தமது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்திற்கேற்ப செயற்படுத்தும் வயல்களில் பெயர்ப்பட்டியலுக்கு ஏற்றவகையில் தேவையான செயற்பாடுகளை செய்தல்.

(3) விவசாய சேவை திணைக்களத்தில் வயல்களின் பெயர்ப்பட்டியலில் ஒவ்வொரு நில உரிமையாளருக்கும் அல்லது உரித்துடையவருக்கும் உரிமையான விவசாய இடங்களின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் பங்குகளை கருத்தாகக் கொண்டு அவர்களுக்கான பிரதான வான்கதவு மற்றும் பிரதான கால்வாய்களை வேறாக்கி அதற்கு ஏற்றவாறு நீர் பயன்பாடு சுமுகமான வகையில் நடைபெறும் வகையில் கையளித்தல் மற்றும் அவ்வாறு கையளித்தலுக்காக மேற்கொள்ள வேண்டிய முறை தொடர்பாக உரிய கட்சியோடு ஒப்பந்தமிடல்.

(4) நில மட்ட முகவரினால் ஒவ்வொரு நில உரிமையாளருக்கும் அல்லது உரித்துடையவருக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்ட பங்கு அத்தியட்சகரின் உதவியோடு பொருத்தமான வகையில் எல்லைகளை அடையாளம் இடல்.

(5) அனைத்து போகங்களும் ஆரம்பிப்பதற்கு முன் உரிய நபர்களினால், அடையாளம் இடப்பட்ட பங்குகளில் முளைத்திருக்கும் பற்றைகளை அழித்து மண் அரிப்பினால் சேதமடைந்துள்ள மதிலின் பகுதிகள், வேறாக்கப்பட்ட, பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களில் அல்லது வெளியில் மண்ணை வெட்டி நிறைத்து சீராக மேற்கொண்டு நடாத்திச் செல்வதை உறுதி செய்தல்.

*அத்தியட்சகரினால் நீதிபதிக்கு தகவல்களை முன்வைத்தல்.*

14. (1) மேலே 13 ஆவது பிரிவின் (3) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள எழுத்து மூல அறிக்கையில் ஏற்படும் ஒப்பந்தத்தை மீறும் பிரகாரம் செயற்படுவதாயின் அவ்வாறு செயற்படுவது தொடர்பாக நில மட்ட முகவரினால் அத்தியட்சகருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

(2) அத்தியட்சகருக்கு மேலே (1) ஆவது உப பிரிவின் கீழ் அறிக்கைச் சமர்ப்பிக்கும்போது புரிந்துணர்வுக்கு அப்பால் செயற்படும் சாராருக்கு 7 நாட்கள் நேரம் கொடுத்து தகவல்களைப் பெறும் அறிக்கையின் பின்னர் மேலும் கால்வாய் பங்குகளைப் பராமரிக்கும் நடவடிக்கைகள் ஒரு சாராரினால் மேற்கொள்ளப்படவில்லையாயின் அது தொடர்பாக அதற்குப் பொறுப்பான அதிகாரத்தையுடைய நீதிவான் நீதிமன்ற நீதிபதிக்கு அத்தியட்சகரினால் அல்லது அவரினால் உரிய முறையில் அதிகாரம் வழங்கப்பட்டவர்கள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியதோடு நீதிபதியினால் அதனை விசாரணை செய்யும்போது உரிய சாராரை அழைத்து பிரதான பராமரிப்புக்கு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்காக போதுமான கட்டளையை வழங்கலாம்.

## IV ஆவது அத்தியாயம்

*நீர்ப்பாசன கட்டுமான அபிவிருத்திக் குழு உருவாக்கல்.*

15. நீர்ப்பாசன பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவினை பிரதிநிதித்துவப்படுத்தும் நீர்ப்பாசன பிரதிநிதிகளின் திட்டங்களை உள்ளடக்கியவாறு நீர்ப்பாசன கட்டமைப்புகளின் பௌதீக அமைப்புகளை கருத்திற்கொண்டு நீர்ப்பாசன கட்டுமானங்களுக்கு ஏற்றவாறு நீர்ப்பாசன கட்டமைப்பு அபிவிருத்திக் குழுவொன்றை உருவாக்குதல் வேண்டும்.

16. (1) நீர்ப்பாசன பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவினை பிரதிநிதித்துவப்படும் நில மட்ட முகவர்களிடையே ஒருவர் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் என்ற வகையில் மூன்று பேர் அங்கத்தவர்களினால் நியமிக்க வேண்டும். *நீர்ப்பாசன கட்டமைப்பு அபிவிருத்திக் குழுக் கலவை.*

(2) அனைத்து நீர்ப்பாசன கட்டமைப்பு அபிவிருத்திக் குழுவின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகிய பதவிகள் நிரந்தர அங்கத்தவர்களாக ஏனைய அங்கத்தவர்கள் நான்கு பேருக்கு மேலதிகமாகாதவாறு ஒற்றுமையின் கீழ் நீர்ப்பாசன கட்டமைப்பு அபிவிருத்திக் குழுவிற்காக தகுதியான ஒரு குழுவை உருவாக்குதல் வேண்டும்.

(3) குழுவில் ஏதாவது பதவி இடைவெளி உருவானால் அதற்காக பொருத்தமான நில மட்ட முகவரொருவர் மீண்டும் அங்கத்தவர்களின் வாக்கின் அடிப்படையில் நியமிக்கப்படும் வரை அந்தப் பதவிக்கு உரிய கடமைகளைச் செய்வதற்காக பொருத்தமான குழு உறுப்பினர் ஒருவரை அத்தியட்சகர் நியமிக்க வேண்டும். அத்துடன் அவ்வாறு நியமிக்கப்படுபவருடைய பதவிக்காலம் பதவி இடைவெளியான உறுப்பினரின் மீதமுள்ள பதவிக்காலமாகும்.

(4) நீர்ப்பாசன கட்டமைப்பு அபிவிருத்திக் குழுவின் பதவி வகிப்பவரின் பதவி நடவடிக்கைகள் தொடர்பாக எதிர்ப்புகள் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அந்தப் பதவியில் அவர் நீக்கப்பட வேண்டும் என கட்டமைப்பு அபிவிருத்திக் குழுவின் அங்கத்தவர்களின் 2/3 வாக்கினால் தீர்மானத்தை அங்கீகரித்து அத்தியட்சகருக்கு முன்வைக்க முடியும். அத்துடன் அவ்வாறான சந்தர்ப்பத்தில் அத்தியட்சகரினால் அது சம்பந்தமாக பொருத்தமான முடிவொன்று எடுக்க வேண்டும்.

17. நீர்ப்பாசன கட்டமைப்பு அபிவிருத்திக் குழுவின் கடமைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும் : *நீர்ப்பாசன கட்டமைப்பு அபிவிருத்திக் குழுவின் கடமைகள்.*

(1) தமது நீர்ப்பாசன கட்டமைப்பின் பாதுகாப்பிற்காக நடவடிக்கை எடுத்தல்.

(2) புனரமைப்பு, அபிவிருத்தி நடவடிக்கைகளில் கட்டமைப்பின் நீர்ப்பாசன வியாபாரங்களுக்கு வழங்கக்கூடிய முன்னுரிமை தொடர்பாக கருத்து மற்றும் ஆலோசனை முன்வைத்தல்.

(3) கட்டமைப்பு பூராகவும் உள்ள நீர்ப்பாசன பாதுகாப்பு மற்றும் வளமுள்ள பிரதேசத்தை பாதுகாத்தல்.

(4) கட்டமைப்பில் அனைத்து நீர்ப்பாசன மற்றும் நீர் வழங்கல் பிரதேசத்தைப் பாதுகாத்தல்.

(5) மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தினால் அனுமதியளிக்கப்பட்ட கட்டமைப்பு திட்டங்களின் பிரகாரம் நீர்ப்பாசன கட்டமைப்பொன்றினுள் இருக்க வேண்டிய அம்சங்கள் மற்றும் பாதுகாப்பு பிரதேசங்களை பாதுகாக்க திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு உதவுதல்.

18. அனைத்து நீர்ப்பாசனக் கட்டமைப்பு அபிவிருத்திக் குழுவும் அத்தியட்சகரினால் பதிவுசெய்யப்படல் வேண்டும்.

19. (1) அனைத்து நீர்ப்பாசன கட்டமைப்பு அபிவிருத்திக் குழுவினாலும் குழுவின் பெயரில் அரசு ஏற்றுக்கொண்ட வங்கியொன்றின் கீழ் கணக்கொன்று பராமரிக்கப்பட வேண்டும்.

(2) குழுவினால் பராமரிக்கப்படும் கணக்கு அத்தியட்சகரினால் அதிகாரம் வழங்கப்பட்டவரினால் கணக்காய்வு செய்ய வேண்டியதோடு கணக்காய்வு தொடர்பான அறிக்கைகள் ஒவ்வொரு நிதியாண்டையும் நோக்காகக் கொண்டு நடைமுறை ஆண்டின் மாச்சு 31 ஆந் திகதிக்கு முன் தலைவரினால் அத்தியட்சகருக்கு முன்வைக்கப்பட வேண்டும்.

20. ஏதாவது நீர்ப்பாசன ஆலோசனைகளின் கீழ் விவசாயம் அல்லாத வணிக குறிக்கோளுக்காக அத்தியட்சகரின் அனுமதி இன்றி யாராவது நபர் அல்லது நீர்ப்பாசன நீரை வெளியீடு செய்யக் கூடாது. *விவசாயம் அல்லாத வணிக குறிக்கோளுக்காக நீரை பயன்படுத்தல்.*

ஏதாவது நீர்ப்பாசன கட்டமைப்பின் கீழ விவசாயம் அல்லாத வணிக குறிக்கோளிற்காக நீரை வெளியிடுவதற்காக அத்தியட்சகரினால் அனுமதி வழங்கப்படுமாயின் அது தொடர்பாக அறவிடவேண்டிய கட்டணம் இந்த சாசனத்தன் கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளினால் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக வேண்டும்.

## V ஆவது அத்தியாயம்

*மாகாண நீர்ப்பாசன அபிவிருத்தி நிதியத்தை உருவாக்குதல்.*

21. இச்சாசனத்தின் நோக்கங்களுக்காக செயற்படுவதை இலகுவாக்கும் பொருட்டு மாகாண நீர்ப்பாசன அபிவிருத்தி நிதியம் என்ற பெயரில் நிதியம் ஒன்று இதில் உருவாக்கப்படும்.

22. (1) மேலே 21 ஆவது பிரிவின் கீழ் உருவாக்கப்படுகின்ற நிதியம் அந்த நிதியத்தின் பெயரில் உருவாக்கப்பட வேண்டியதோடு அதற்கு தடையற்ற இருப்பொன்று மற்றும் பொது முத்திரையொன்று இருக்க வேண்டியதோடு நிதியத்தின் பெயரில் வழக்கு தொடர்வதற்கும் மாற்றுவதற்கும் கூடியதாக இருக்க வேண்டும்.

(2) (இங்கு இதன் பிறகு நிதியம் என்று அழைக்கப்படும்) மாகாண நீர்ப்பாசன அபிவிருத்தி நிதியம் உத்தியோகபூர்வ அதிகாரத்தோடு செயற்படும். கீழ்க்குறிப்பிட்ட அங்கத்தவர்களை உள்ளடக்கிய கட்டுப்பாட்டாளர்கள் அமைப்புடன் இருக்க வேண்டும். அதாவது,

(அ) தென் மாகாண நீர்ப்பாசன விடயம் தொடர்பான அமைச்சரவையின் செயலாளர்.

(ஆ) தென் மாகாண உப பிரதான செயலாளர் (திட்டமிடல்).

(இ) தென் மாகாண உப பிரதான செயலாளர் (நிதி).

(ஈ) தென் மாகாண நீர்ப்பாசன அத்தியட்சகர்.

(உ) தென் மாகாண விவசாய அத்தியட்சகர்.

(3) அமைச்சரவையின் செயலாளர், நிதியத்தின் தலைவராவார்.

(4) நிதியத்தின் செயலாளர், திணைக்களத்தின் பிரதான நீர்ப்பாசன பொறியியலாளராக வேண்டும்.

(5) நிதியத்தின் கணக்குகளை தயாரித்தல், நிதியத்தின் செயலாளரின் நிர்வாகத்திற்குக் கீழ் திணைக்களத்தின் பிரதான கணக்காய்வாளரால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

*நிதியத்தின் நோக்கம்.*

23. நிதியத்தின் நோக்கம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவையாகும் :

(1) மாகாணத்தின் நீர்ப்பாசனத்திற்கு ஏற்றவையான பராமரிப்பு மற்றும் செயற்பாடுகள், அபிவிருத்தி, புனர் நிர்மாண செயற்பாடுகள் வினைத்திறனாக செய்தல்.

(2) நீர்ப்பாசனத் துறைக்கு தொடர்பான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை செய்தல்.

(3) வெள்ளம் மற்றும் கடல் நீர்ப்பெருக்கினால் ஏற்படும் அனர்த்த முகாமையை வினைத்திறனாக மேற்கொள்ளல்.

(4) நீர்ப்பாசன வளங்களின் பாதுகாப்பிற்காக வசதிகளை வழங்கல்.

(5) நீர்ப்பாசன பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் குழுக்களினதும் நீர்ப்பாசன அமைப்புகளின் அபிவிருத்திக் குழுக்களின் மனித வளத்தை மேம்படுத்தல்.

*நிதியத்தின் அதிகாரம் மற்றும் கடமைகள்.*

24. (1) சொத்து வைத்திருத்தல், நீக்குதல், கொள்வனவு செய்தல், குத்தகைக்கு விடல் மற்றும் விற்பனை செய்தல்.

(2) நிதியத்தின் நோக்கத்தின்கீழ் கொண்டுவரக்கூடிய எந்தவொரு விடயமும் தொடர்பாக ஏனைய கட்சிகளுடன் உடன்படிக்கை செய்துகொள்ளல்.

(3) நிதியத்தின் நோக்கத்தின்கீழ் கொண்டுவரக்கூடிய எந்தவொரு விடயமும் தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய வியாபாரங்களை இனங்காணல், அனுமதியளித்தல் மற்றும் செயற்படுத்தல், அவ்வாறு செயற்படுத்தும்போது அதற்குத் தேவையான தொழிலாளர் உள்ளீடு மற்றும் ஆலோசனைச் சேவைகள்.

(4) நிதியத்தின் நோக்கத்தின்கீழ் கொண்டுவரக்கூடிய எந்தவொரு விடயமும் தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய அவசியமான பௌதிக வளங்கள் மற்றும் வேறு சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்.

(5) நிதியத்தின் நோக்கத்தின்கீழ் கொண்டுவரக்கூடிய எந்தவொரு விடயமும் தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய அவசியமான மனித வளங்களின் பங்களிப்புக்குத் தேவையான விலையைக் குறித்தலும் செலுத்தலும்.

(6) இந்த சாசனத்தின் நிதியத்தின் நோக்கத்தின்கீழ் கொண்டுவரக்கூடிய எந்தவொரு விடயமும் தொடர்பாக செயற்படலும் அதற்கு ஏற்றவாறு செலவினை ஏற்றலும்.

25. நிதியத்தின் பற்றுகள் பின்வருமாறாகும் : நிதியத்தின் பற்றுகள்.

(1) விவசாயம் அல்லாத வணிக செயற்பாடுகளுக்கு நீர் வழங்கும்போது அறவிடப்படும் கட்டணம்.

(2) அரசாங்கத்தினால் உதவி அடிப்படையில் இடைக்கிடையே வழங்கப்படும் பணம்.

(3) தென் மாகாண சபையினால் நிதியத்தின் கணக்கின் செயற்பாடுகளுக்காக நிறைவேற்றப்பட்டு எடுக்கக்கூடிய தொகை.

(4) யாராவது ஒரு நபர், அலுவலகம் அல்லது கூட்டமைப்பொன்றின் மூலமாக செய்யப்படும் மாகாண நீர்ப்பாசன அபிவிருத்திக்காக நன்கொடையாக பெறப்பட்ட அனைத்துப் பணமும்.

(5) குழுவினால் சேவைக்கட்டணமாகப் பெறப்படும் பணம்.

(6) கண்காட்சி, அதிஷ்டலாபச் சீட்டு மற்றும் வேறு அனுமதிக்கப்பட்ட வழிகளில் பெற்றுக்கொள்ளப்படும் அனைத்துப் பணமும்.

26. நிதியத்தினால் செய்யப்படும் செலவுகள் பின்வருமாறாகும் : நிதியத்தின் செலவுகள்.

(1) இந்த சாசனத்தின் நோக்கத்தின்கீழ் கொண்டுவரக்கூடிய ஏதாவது செயற்பாடு தொடர்பாக செய்யக்கூடிய செலவுகள்.

(2) நிதியத்தின் பெயரால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் செலவுகள், நிதியத்திற்காகப் பெறப்படும் சேவைகள் அல்லது கொள்வனவுகளுக்காக செய்யப்படும் செலவுகள்.

(3) நிதியத்திற்காக வழங்கப்படும் சேவைகளுக்காக கொடுக்கப்படும் மனித வளத்திற்கான அல்லது ஏனைய செலவுகள்.

(4) நிதியத்தின் பெயரால் செய்யப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக செய்யவேண்டிய ஏதாவது செலவுகள்.

27. நிதியத்திற்கான கணக்கு, அரசாங்கம் அனுமதியளித்த வங்கியொன்றின் கீழ் நடைமுறைப்படுத்த வேண்டும்.

28. நிதியத்தின் பணத்திற்காக நிதியாண்டு லித் ஆண்டாக இருக்கவேண்டியதோடு அனைத்து லித் ஆண்டிற்காகவுமான வரவு செலவு தொடர்பான கணக்கு அறிக்கை அடுத்த ஆண்டில் மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன் நிதியத்தின் செயலாளரினால் தயாரிக்கப்பட்டு பிரதான செயலாளருக்கு முன்வைக்கப்பட வேண்டும்.

*நிதியத்தின் கணக்கை மேற்கொள்ளலும் கணக்காய்வும்.*

*29.* நிதியத்தின் கணக்காய்வு தொடர்பான அரசியல் அமைப்பின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக வேண்டும் :

(1) நிதியத்தின் நிர்வாகம் மற்றும் கணக்கை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக நிதியத்தின் செயலாளரினால் லித் வருடத்திற்காக தயாரிக்கப்பட்ட நிதியாண்டறிக்கையை அடுத்த ஆண்டின் மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன் தயாரித்து நிதியத்தின் நிர்வாக சபைக்கு முன்வைக்கப்பட வேண்டியதோடு நிர்வாக சபையினால் அங்கீகாரம் பெற்ற அறிக்கையை அந்த வருடத்தின் யூன் மாதம் 31 ஆந் திகதிக்கு முழுமையாக அமைச்சருக்கு முன்வைக்கப்பட வேண்டும்.

(2) அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட நிதியம் தொடர்பான ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை அந்த அபிவிருத்தி நிதிய கணக்கில் கணக்காய்வு செய்யப்படுவதோடு அந்த வருடத்தின் கணக்குகளின் பிரதி, அந்தக் கணக்கு தொடர்பான கணக்காய்வாளரின் அறிக்கையும் தென் மாகாண சபையின் அமைச்சரவைக்கு அனுமதி பெற தென் மாகாண சபையில் வைக்க வேண்டும்.

## VI ஆவது அத்தியாயம்

*தவறு.*

*30.* இந்த சாசனத்தின் கீழ் பின்வருவனவற்றை மேற்கொள்ளல் தவறாகும் :

(1) (அ) தடுக்கப்படுதல்.

(ஆ) தொந்தரவு செய்தல்.

(இ) சட்டவிரோதமாக சுற்றிவளைத்தல்.

(ஈ) சேர்த்து வைக்கப்பட்ட நீரை வேண்டுமென்றோ அல்லது கேடு விளைவிக்கும் நோக்கில் விரயமாவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(உ) மரம் வெட்டுதல்.

(ஊ) அனுமதியின்றி ஏதாவது கட்டுமானங்களை மேற்கொள்ளல்.

(எ) அனுமதியின்றி பயிர் செய்தல்.

(2) ஏதாவது குளம் ஒன்றில், நீர் ஊற்று உள்ள பிரதேசத்தில் உள்ள வாய்க்காலொன்றில், நீர்ப்பாசனமொன்றில், நீர் வழியில், குளக்கட்டில், ஆற்றங்கரையில், சரணாலயத்தில், அணையில், குளத்தின் தொடக்கத்தில் அல்லது நீர்ப்பாசன கட்டுமான ஏனைய வளங்களில் அனுமதியின்றி கனிமம் அல்லது மண் அகழ்தல் அல்லது அகழ்தலுக்கு திட்டமிடல்.

(3) எந்த நீர்ப்பாசனத்திற்கும், கால்வாயொன்றிற்கு, நீர் வழியொன்றிற்கு, நீர் சரணாலயத்திற்கு அல்லது நெல் வயலிற்கு கழிவுகளைத் திறந்துவிட திட்டமிடல் அல்லது வழிந்தோட வழிவகுத்தல் அல்லது அவ்வாறாகும் வகையில் வாகனம், இயந்திரங்களைக் கழுவுதல்.

(4) அத்தியட்சகரின் எழுத்து மூலமான அனுமதியுடன் மற்றும் அவரினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு கீழாக அல்லாமல் ஏதாவது கால்வாய் தோண்டுதல், குளம் கட்டுதல், கட்டுமானங்களைக் கட்டுதல் அல்லது பராமரித்தல்.

(5) ஏதாவது நீர்ப்பாசன வழிக்கு, கால்வாய்க்கு, நீர் வழிக்கு, நீர் சரணாலயத்திற்கு சேதம் ஏற்படுமாறு கால்நடைகளை மேய்வதற்கு விடுதல்.

(6) மாகாண நீர்ப்பாசன அத்தியட்சகரின் உரிய எழுத்து மூலமான அனுமதியின்றி குளத்தின் ஒரு பகுதியில் பயிர்ச்செய்கையில் ஈடுபடல்.

(7) அறுவடை கூட்டத்தில் தீர்மானத்தின் பின் புரிந்துணர்வொன்றுக்கு வந்த பின் அதற்கு நேர் எதிராக, மாற்று பயிர்ச்செய்கைகள் அல்லது அனுமதியின்றி நீண்ட காலம் பயிர் தரக்கூடிய பயிர்ச்செய்கை.

(8) யாராவது ஒருவர் நீர்ப்பாசன உரிமைகளுக்கு, தீங்கு விளைவிக்கும் வகையில் செயற்படுவது.

31. மேலே 30 ஆவது பிரிவில் குறிப்பிட்ட (2) ஆவது உப பிரிவு தவிர ஏனைய ஏதாவது ஒரு தவறை செய்வது தொடர்பில் நீதிவான் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்ட பின் ரூபா 10,000 இற்குக் குறையாததும் ரூபா 50,000 இற்குக் கூடாததுமான அபராதமொன்று அல்லது 6 மாதங்களுக்குக் குறையாததும் 12 மாதங்களுக்கு கூடாததுமான காலத்திற்கான சிறைவாசம் அல்லது இந்த இரண்டு வகையிலும் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

32. மேலே 30 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவிற்கேற்ப தவறொன்றைச் செய்தல் தொடர்பாக நீதிவான் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்ட பின் ரூபா 50,000 இற்கு குறையாததும் ரூபா 100,000 இற்குக் கூடாததுமான அபராதமொன்றை அல்லது 6 மாதங்களுக்குக் குறையாததும் 12 மாதங்களுக்குக் கூடாததுமான காலத்திற்கான சிறைவாசம் அல்லது இந்த இரண்டு வகையிலும் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

33. இந்த சாசனத்தின் கீழ் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகள் தொடர்பாக மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகளையும் உள்ளடக்கியதாக சாசனத்தின் நோக்கத்தின் கீழ் எடுக்கப்படும் ஏதாவது குறிப்பு தொடர்பாக அமைச்சரினால் உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

34. திணைக்களத்தின் அனைத்து அதிகாரங்களும் குற்றவியல் சட்டத்தின் விளக்கத்தின்படி அரசின் அதிகாரங்களாக கருத வேண்டும்.

35. இந்த சாசனத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி ஆகிய மொழிகளுக்கிடையே ஏதாவது முரண்பாடுகள் ஏற்படின், அப்போது சிங்கள மொழி வலுவுடையதாக இருக்க வேண்டும்.

36. இந்த சாசனத்தின் வசனங்களைப் பற்றி ஒரு வேறுபாடு தேவைப்பட்டாலன்றி, பொருள் விளக்கம்.

(1) " மாகாண சபை" என்பது, தென் மாகாணத்தின் மாகாண சபை என்பதைக் குறிக்கும்.

(2) "அமைச்சர்" என்பது, தென் மாகாணத்தின் நீர்ப்பாசன விடயங்களுக்கான அமைச்சர் என்பதைக் குறிக்கும்.

(3) "செயலாளர்" என்பது, தென் மாகாணத்தின் நீர்ப்பாசன விடயங்களுக்கான அமைச்சின் செயலாளர் என்பதைக் குறிக்கும்.

(4) "மாகாண நீர்ப்பாசன திணைக்களம்" அல்லது "திணைக்களம்" என்பது, தென் மாகாணத்தின் நீர்ப்பாசன விடயங்களுக்கான திணைக்களத்தினைக் குறிக்கும்.

(5) "மேலதிக மாகாண அத்தியட்சகர்" என்பது, தென் மாகாணத்தின் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதித் தலைவரைக் குறிக்கும்.

(6) "வயற் காணி" என்பது, இந்த சாசனத்தின் கருத்திற்கேற்ப நெல் பயிரிடுவதற்காக பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக்கூடிய இடத்தைக் குறிப்பிடுவதோடு, தனியார் காணி மற்றும் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட, அரச காணி கட்டளைச் சட்டம் மற்றும் ஏனைய சட்டங்களின் கீழ் கையெழுத்திடப்பட்ட இடமும் அதற்கு உள்ளடங்கும்.

(7) "நில மட்டம்" என்பது, தென் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பெயர் மூலம் அல்லது பயன்படுத்த அனுமதி கிடைக்கப்பெற்ற பயிரிடும் பூமியின் எந்தவொரு பகுதியையும் குறிக்கும்.

(8) "அனுபவிப்பவர்" என்பது, நில உரிமையாளர் அல்லது குத்தகைதாரர் அல்லது வேறு காரணத்திற்காக குத்தகைக்கு எடுத்து பயிரிடுவதற்காக விவசாய நிலத்தில் பயிரிடும் நபரை குறித்து நிற்பதோடு நில மேம்பாட்டு கட்டளைச் சட்டத்தின்கீழ் அல்லது வேறு சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஒருவருக்கு உரித்தான நிலத்தைப் பயன்படுத்தும் மற்றும் அனுபவிக்கும் நபரையும் குறிக்கும்.

(9) "நீர்ப்பாசனம்" என்பது, விவசாய நில உரிமையாளர்கள் பட்டியலில் சட்ட ரீதியாக உள்ளாக்கப்பட்ட சரணாலயங்கள், கால்வாய்கள், ஏரிகள், வயல்களை உள்ளடக்கியதான நீர்ப்பாசனம் ஒன்றின் அல்லது பலதினை உள்ளடக்கிய பிரதேசமாகும்.

*(10) "எல்லங்காவ மற்றும் நீர்ப்பாசன அமைப்பு" என்பது, ஏதாவது சாய்வான பகுதியில் இருந்து ஆரம்பித்து ஒரே திசையில் பாய்ந்து செல்லும் நீரோட்டம் மழை காரணமாக கரைபுரண்டு நீர் சேர்ந்து ஒன்றாக அடித்துச் சென்று, இறுதியாக பிரதான ஆற்றிற்கு, ஓயாவிற்கு இணைவதற்கு முன் நீரைச் சேமித்து அந்த நீரைப் பயன்படுத்தக்கூடிய வகையில் மேற்கொள்கின்ற நீர்ப்பாசனக் கட்டுமானம் மற்றும் ஒன்றுசேர்க்கின்ற வளமுடைய பிரதேச, சரணாலய, கால்வாய், ஏரி, வயல்களினை உள்ளடக்கிய நீர்ப்பாசன கட்டமைப்பொன்று அல்லது பலதினை உள்ளடக்கிய பிரதேசமாகும்.*

*(11) "சேவைக் கட்டணம்" என்பது, நீர்ப்பாசன அபிவிருத்திக் குழுவினால் சுயமாக சிறு நீர்ப்பாசன இணைப்பு ஏரிக்கரை அமைப்பு கட்டுமானத்தினை உரிய முறையில் நடைமுறைப் படுத்துவதற்காக சில சந்தர்ப்பங்களில் அரசினால், மாகாண சபையினால் அல்லது வேறு ஏதாவது குழுவினால் பண முதலீடுகள் பெறப்படின், அது முதலீடுகள் போதுமானதாக இல்லையெனில் அல்லது கிடைக்காவிடில் செய்யவேண்டிய கட்டாயமான புனரமைப்பினைச் செய்வதற்காக ஆரம்பித்து செயற்படுத்திச் செல்லும் நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யும் இந்த சாசனத்திற்கு ஏற்ப உரிய அமைச்சரினால் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப சட்ட ரீதியாக நடாத்தப்படும் நீர் மட்டத்தின் அளவிற்கு ஏற்ப தீர்மானிக்கும் பணமாகும்.*

*(12) "பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கு" என்பது, ஏதாவது சிறு நீர்ப்பாசனத் திட்டத்தின் அல்லது நீரைப் பெற்று விவசாயம் செய்கின்ற நிலப்பரப்பு, விவசாயப் பெயர்ப்பட்டியலிற்கு உள்ளாகியுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை மற்றும் விவசாய நில அளவை கணக்கிட்டு, மதிப்பிட்டுப் பகிர்ந்த பின், பிரதான அணையின் அல்லது கால்வாயில் கிடைக்கும் பங்கைக் குறிக்கும்.*

*(13) "நீர்ப்பாசன சரணாலயம்" என்பது, நீர்ப்பாசன அமைப்பின் ஒரு பகுதியாகும். இவ்வமைப்பிற்கு உரிய கால்வாய், நீரோட்டம், குளம், விவசாய பாதை அல்லது அமைப்பின் ஏதாவது பகுதிக்கு உரித்தாகும். எதிர்கால மேம்பாட்டிற்காக அல்லது வெள்ளம் போன்ற விசேட சந்தர்ப்பங்களின் கீழ் நீர் மட்டம் அதிகரிப்பதால் நீர் பரவுவதற்கு வாய்ப்புள்ளதால், அத்துடன் திணைக்களத்தின் ஊழியர்கள் அல்லது கட்டுமானங்களில் ஈடுபடும் ஊழியர்களின் மற்றும் அவர்களது இயந்திர உபகரணங்களின் தொழிற்பாட்டிற்குத் தேவையான அத்தியட்சகரினால் தீர்மானிக்கப்பட்ட நிலப் பரப்பாகும்.*

*04-894*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.